DEPOSITION OF WITNESS
(Chapter XX Code of Criminal Procedure)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

**அமர்வு வழக்கு எண்.302/2015**

Deposition of :PW -4

| | | |
|---|---|---|
| Name : | திரு. கனகா | Caste: |
| Husband's Name: | திரு. கணபதி | Calling: |
| Village : | | Religion: |
| Taluk : | | Age: |
| Date : | | |

Thiru. G. Sri Rama Jeyam, B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, அவர்கள், Solemnly affirmed by Tmt.A.G.Mohanasundari, Translator of this court in accordance with the provisions of Oath Act 44/1969, this the 6th day of June - 2023.

A1 and A3 to A6 present.

**06.06.2023.**

**முதல் விசாரணை**

நான் அரியானூரில் வீரபாண்டி யூனியன் அலுவலகத்தின் எதிரே வசித்து வருகிறேன். எனது கணவர் பெட்ரோல் பங்கில் வேலை பார்க்கிறார். நான் ஹோட்டல் கடை நடத்தி வருகிறேன். அந்த அரியானூர் பேருந்து நிறுத்தில் இருக்கிறது. அந்த கடையின் பெயர் ஸ்ரீ ராஜகணபதி உணவகம். கொலை செய்யப்பட்ட விஜயனை தெரியும். அவர் எனது பாட்டி வீட்டிற்கும், எனது கடைக்கும் வருவார். அதனால் அவரை எனக்கு தெரியும். 1 ஆம் எதிரி சுந்தரமூர்த்தியை இந்த வழக்கு பிரச்சனைக்கு பின்னர் பேப்பரில் பார்த்த வகையில் தெரியும். அதற்கு முன்பு அவர் எனக்கு தெரியாது.

விஜயன் எனது கடைக்கு அவ்வப்போது வருவார். வந்து பேசிக்கொண்டிருப்பார். சிலசமயங்களில் சாப்பிட்டு விட்டு அவரது தாயாருக்கும் உணவு வாங்கி செல்வார். விஜயன் இறந்ததாக சொல்லப்படும் தினத்திற்கு முதல்நாள் விஜயன் எனது உணவகத்திற்கு வந்தார்.. அப்போது இரவு 8.00 மணி இருக்கலாம். டீ சாப்பிட்டு விட்டு

சிறிது நேரம் பேசிகொண்டிருந்து விட்டு புறப்பட்டு சென்றுவிட்டார். அதற்கு மறுதினம் விஜயன் கொலை செய்யப்பட்டுவிட்டதாக கேள்விப்பட்டேன். வேறு எதுவும் எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

(சாட்சியை பகுதியாக பிறழ் சாட்சியாக கருதி கு.வி.செய்ய அரசு தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொணடதற்கிணங்க அனுமதி வழங்கப்பட்டது)

**குறுக்கு விசாரணை (அரசு தரப்பில்)**

01.09.2014 ஆம் தேதியன்று இரவு 8.45 மணி முதல் 9.00 மணியளவில் விஜயன் எனது கடையில் உட்கார்ந்து என்னிடம் பேசிக்கொண்டிருந்தபோது இவ்வழக்கின் 1 ஆம் எதிரியும், அவருடன் சேர்ந்த 2, 3 நபர்களும் எனது கடைக்கு முன்பாக எங்களை பார்த்துக்கொண்டே சென்றார்கள் என்று நான் போலிசார் விசாரணையில் சொல்லவில்லை. நான் மேற்கண்டவாறு போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்றுவதற்காக உண்மை சங்கதிகளை மறைத்து பொய் சாட்சி சொல்லுகிறேன் என்றால் சரியல்ல.

**1 ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் சம்பவ இடத்திற்கு போகவில்லை. பிரேதத்தையும் பார்க்கவில்லை. விஜயன் இறந்த மறுதினம் போலிசார் எனது கடைக்கு வந்து மாலை நேரத்தில் என்னை விசாரித்தார்கள். மறுதினமும் என்னை கடையில் வைத்து விசாரித்தார்கள். அதிலிருந்து 15 தினங்கள் கழித்து என்னை காவல்நிலையத்திற்கு வரச்சொல்லி விசாரணை செய்தார்கள்.

**மற்ற எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.**

**மறுவிசாரணை இல்லை.**

Sd/- **G. Sri Rama Jeyam,**
III Additional District Judge,
Salem.